மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

தமிழ்மொழிப் பாடப் புத்தகத்திலுள்ள மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள படங்களின் பன்முகத்தன்மை (Multimodality)

Multimodal Visual Analysis of Traditional Poetry in Tamil Language Textbook

ராதா அய்யாசாமி/ Ratha Ayyasamy[1]
தனலெட்சுமி பெருமாள்/ Thanalachime Perumal[2]
செல்வஜோதி ராமலிங்கம்/ Selvajothi Ramalingam[2]
[1]PhD Scholar, Faculty of Languages and Linguistics, University Malaya
[2]Senior Lecturer, Faculty of Languages and Linguistics, University Malaya
Corresponding Email: s2120178@siswa.um.edu.my

ஆய்வுச் சுருக்கம்

இருபத்தியோராம் நூற்றாண்டில் கல்வி மாற்றங்களின் சவால்களை எதிர்கொள்ள பல்வேறு திறன்களும் கருவிகளின் பயன்பாடும் அவசியம். இன்றைய மாணவச் சமூகம் நவீன கால யுகத்திற்கு ஏற்றாற்போல் கற்றல் கற்பித்தலிலும் மாற்றங்களை விரும்புகின்றனர். மாணவர்களின் கல்வியறிவுத் திறன்களைச் செழுமைப்படுத்த புதிய புதுப்பித்த நுட்பங்களின் பயன்பாடு மிக மிக அவசியம். ஆசிரியர்களின் கற்றல் கற்பித்தலின் மிக முக்கியமான பாடத்துணைப்பொருளாகப் பாடப்புத்தகங்கள் விளங்குகின்றன. முதலாம் ஆண்டு தொடங்கி படிவம் ஐந்து வரையிலான பாடப்புத்தகங்கள் கால வரையறைக்கு ஏற்ப மாற்றம் கண்டு புதிய வடிவமைப்பில் உள்ளன. தொடக்கத்தில் பாடப்புத்தகத்திலுள்ள படங்கள் வாசிப்புப் பகுதியின் உரையின் உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ளும் வகையில் மட்டுமே அமைந்திருந்தன. ஆனால், தற்போது அவை மொழியைக் கற்றுக்கொள்ளும் வகையில் அமைந்திருக்கின்றன. தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்பக் கல்வித் துறையில் பல மாற்றங்களும் புதியக் கண்டுபிடிப்புகளும் உருவாகியுள்ள போதிலும் பாடப்புத்தகத்தின் பயன்பாட்டின் அவசியம் ஈடுஇணையற்றது. ஆக, இந்த ஆய்வின் நோக்கமானது தமிழ்மொழிப் பாடப்புத்தகத்திலுள்ள மரபுக்கவிதைகளில் இடம்பெற்றுள்ள படங்கள் பன்முகத்தன்மையில் (multimodality) அமைந்திருக்கின்றதா என்பதை ஆராய்வதே ஆகும். நான்காம் படிவ தமிழ்மொழிப் பாடப்புத்தகம் இவ்வாய்வுக்குத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது Kress & van Leeuwen (2006) கோட்பாடுகளின் அடிப்படையில் தரவியல் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. பன்முகத்தன்மை (multimodality) என்பது மொழியியலில் பயன்படுத்தப்படும் ஒரு புதியக் கோட்பாடாகும். பன்முகத்தன்மை கூறுகளைக் கொண்ட படங்களை உட்புகுத்திய மரபு கவிதைகளைக் கற்பதன் வழி கவிதையை மாணவர்கள் எளிதாகப் புரிந்துகொள்வர். இஃது அவர்களின் மனவளர்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் மேம்படுத்தும். இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் பாடப்புத்தகத்தில் மரபு கவிதைகளில் இடம்பெற்றுள்ள படங்கள் தயாரிப்பின் தரத்தை மேம்படுத்த உதவும். இந்த ஆய்வு புத்தக வெளியீட்டாளர் திறம்பட பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கான வழிகாட்டலை உருவாக்க முடியும். தமிழ்மொழிப் பாடப்புத்தகத்தில் உரைநடை மட்டுமல்லாது மரபு கவிதைகளுக்கும் காட்சிக் கூறுகளின் அடிப்படையிலும் தனிமனிதப் பொருளின் அடிப்படையிலும் பகுப்பாய்வு செய்வது இன்னும் ஆரம்ப நிலையில் உள்ளது. எனவே, மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்களில் பன்முகத்தன்மை கூறுகளை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் பயன்படுத்துவதற்கான விளக்கத்தை இந்த ஆய்வு தெளிவாக வழங்கும்.

கருச்சொற்கள்: மரபு கவிதை, பன்முகத்தன்மை, பாடப்புத்தகம், தொழில்நுட்பம், 21ஆம் நூற்றாண்டுக் கல்வித் திட்டம்

Abstract

The use of different skills and tools is necessary to meet the challenges of educational changes in the twenty-first century. Today's student society wants changes in learning and teaching to suit the modern world of education. The use of new and up-to-date techniques is necessary to enrich students' literacy skills. Textbooks are the most important teaching aids for teachers. The textbooks starting from Year 1 to Form 5 have been revised according to the time frame and are in a new format. Initially the pictures in the textbook were only meant to help understand the content of the text in the reading section. But now they are geared towards learning the language. Despite the many changes and innovations in the field of education with the advancement of technology, the need for the use of textbooks is unmatched. Therefore, the purpose of this study is to investigate whether the images in the traditional poems in the Tamil language textbook are multimodality. Form 4 Tamil language textbook will be used as data for this review. This study will be statistically analyzed based on the theory of Kress & van Leeuwen, (2006). Multimodality is a new theory used in linguistics. Students can easily understand poetry by learning traditional poems that incorporate images with multimodality elements. This will improve their mental development and intellectual development. The findings of this study will help to improve the quality of the production of pictures in traditional poetry in the textbook. This study can help the textbook publisher develop guidelines for producing textbooks effectively. Therefore, this study will clearly provide an explanation for the more accurate and efficient use of diversity elements in traditional poetry.

Keywords: Traditional poetry, Multimodality, Textbook, Technology, 21st Century Curriculum

முன்னுரை

பாடப்புத்தகம்

உலகெங்கிலும் உள்ள ஆசிரியர்களின் கற்பித்தல் குறிப்பின் ஒரு முக்கியப் பகுதியாக பாடப்புத்தகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) 2016-இல் நடத்தப்பட்ட ஆய்வின்படி '70% முதல் 95% வரை பாடப்புத்தகங்கள் பாடவேளையில் ஒரு முக்கியப் பாடத்துணைப் பொருளாக ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகின்றன. பாடப்புத்தகத்தின் பயன்பாடு எவரும் புறக்கணிக்க முடியாத ஒன்று என்பதை அறிகிறோம் Benavot and Jere (2016). அனுபவம் வாய்ந்த மூத்த ஆசிரியர்களுக்கு மட்டுமின்றி பல புதிய ஆசிரியர்களுக்கும் பள்ளிப் பாடப்புத்தகங்கள் கற்றல் கற்பித்தலின் வழிகாட்டியாகவும், குறிப்பிட்ட பாடத்திட்டத்தின் வழிகாட்டுதலின் முக்கிய அடித்தளமாகவும் அமைவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இன்றைய பாடப்புத்தகங்களில் அதிகமான படங்கள் உள்ளன. படங்களின் பயன்பாடு மொழிக் கற்றல் செயல்முறையோடு தொடர்பு வகிக்கின்றது Kasmaienezhadford et al. (2015). மாணவர்கள் ஒரு மொழியைக் கற்கும் போது துணை நிற்கும் படங்கள் மாணவர்களின் கற்பனைத்திறனையும் படைப்பாற்றலையும் அதிகரிக்கும் என்று கூறியுள்ளனர். பாடப்புத்தகத்திலுள்ள படங்கள் மாணவர்களின் கவனத்தை ஈர்க்கவும் எளிதாகப் புரிந்துகொள்ள முடியாத பாடப்பகுதியின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளவும் உதவுகின்றன Shabiralyani et al. (2015). பாடப்புத்தகங்கள் உரைநடைப் பனுவலை மட்டும் கொண்டிராது, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு, கடிதம், உரையாடல், பாடல் மற்றும் கவிதை ஆகிய பல்வேறு படிமங்கங்களை உள்ளடக்கிய ஒன்றாக விளங்குகிறன.

பன்முகத்தன்மை (Multimodality)

தொழில்நுட்பத்தின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் கற்றல் கற்பித்தலில் பல்வேறு புதிய அணுகுமுறைகள் உருவாகியுள்ளன. பன்முகத்தன்மை என்பது கற்றல் ஊடகத்திற்கான ஒரு புதிய அணுகுமுறையாகும் Serafini (2012a). பாடப்புத்தகங்களில் உள்ள படங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் மிகவும் பயனான ஒரு தரவாகும். இருபத்தியோராம் ஆண்டு கற்றல் கற்பித்தலில் பன்முகத்தன்மை, கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளின் மேம்பாட்டை வலியுறுத்தும் மிகவும் முக்கியமான அணுகுமுறையாகும். இது கற்றல் கற்பித்தலில் மாணவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த அணுகுமுறையாகும். தற்கால கலாச்சாரம், பன்மைத்துவம் மற்றும் பன்முகத்தன்மையைக் கொண்டிருப்பதே இதன் காரணமாகும் Serafini (2012b).

மரபு கவிதை

மரபு கவிதை என்பது யாப்பு இலக்கணத்தோடு அமைந்தது. யாப்பு என்றால் கட்டுதல் என்று பொருள். அதாவது எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற இலக்கண உறுப்புக்களால் கட்டப்படுவது. பாட்டுக்குரிய இலக்கணம் யாப்பிலக்கணமாகும். யாப்பு என்பது செய்யுள் எனவும் பொருள்படும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனச்

செய்யுள் நான்கு வகைப்படும். தமிழ் இலக்கியத்தில் உள்ள சங்க இலக்கியப் பாடல்கள், பக்தி இலக்கியப் பாடல்கள் முதலிய அனைத்தும் மரபு கவிதையைச் சார்ந்தவை. ஆரம்பப் பள்ளி துவங்கி இடைநிலைப்பள்ளி பாடப்புத்தகங்கள் வரை மரபு கவிதைகள் சிறந்த பாடப்பொருளாக இடம்பெற்றுள்ளன.

முந்தைய ஆய்வுகள்

Mohd Nazri Abdul Rahman et al. (2013) இடைநிலைப் பள்ளிப் பாடப்புத்தகங்களின் உள்ளடக்க அமைப்பின் தரம், வடிவமைப்பு, செயலாக்கம் பற்றிய ஆய்வை நடத்தினர். பள்ளிக் கற்றல் வளங்களின் திறனையும் செயல்திறனையும் மேம்படுத்தும் முயற்சியில், இடைநிலைப் பள்ளி பாடப்புத்தகங்கள் தரம், வடிவமைப்பு, உள்ளடக்க அமைப்பின் செயலாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றங்கள் காண வேண்டும் என்றனர். Mohd Nazri Abdul Rahman et al. (2013) உயர்நிலைப் பள்ளி பாடப்புத்தகங்களில் புதுமை, படைப்பாற்றல், வடிவமைப்பு ஆகியவை பல குறிகாட்டிகளால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும், அவர்களின் ஆய்வில், பாடப்புத்தகங்களில் புதுமையையும் படைப்பாற்றலையும் பாதிக்கும் பல்வேறு குறிகாட்டிகள் இலக்கிய ஆய்வின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டன. மலேசியா முழுவதிலுமிருந்து மொத்தம் 112 வல்லுநர்கள் இடைநிலைப் பள்ளிப் பாடப்புத்தகங்களுக்கான வடிவமைப்பு மாதிரிகளின் புதுமை மற்றும் படைப்பாற்றல் வளர்ச்சியில் ஈடுபட்டனர். ISM அணுகுமுறையின் மூலம், இந்த ஆய்வின் முடிவுகள், உயர்நிலைப்பள்ளி பாடப்புத்தகங்களை உருவாக்க புதிய வடிவமைப்பு அணுகுமுறை மூலம் பாடநூல் எழுத்தாளர்களுக்கு உதவும். பாடப்புத்தகங்களின் உள்ளடக்கத்தரமும் வடிவமைப்பும் பற்றிய ஆய்வுகள் பல நடத்தப்பட்டுள்ள வேளையில், பாடப்புத்தகங்களிலுள்ள படங்கள் பன்முகத்தன்மை அடிப்படையில் செய்யப்படும் ஆய்வுகள் இன்னும் குறைவாகவே உள்ளன.

Nisha (2017) மலேசியாவிலுள்ள மரபு கவிதை எழுத்தாளர் செ. சீனி நைனா முகம்மது அவர்கள் எழுதிய மரபு கவிதைகளின் தொகுப்பான “தேன் கூடு” நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகளை ஆய்வு செய்துள்ளார். அவர் மரபு கவிதைகளின் மையம் மற்றும் கவிதைகளின் மொழிநடையை ஆய்வு செய்துள்ளார். எழுத்தாளர் சீனி நைனா முகம்மது அவர்களின் மரபு கவிதைகளின் மரபு மீறாமல், யாப்பிலக்கணக் கூறுகளைப் பயன்படுத்தியும் கவிதைகள் அனைத்தும் அளவடி மற்றும் சிந்தடி வடிவத்தில் அமைந்துள்ளன என ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். எழுத்தாளரின் மரபு கவிதையில் இடம்பெற்றுள்ள சிறப்புகளே இவ்வாய்வில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. இருப்பினும், பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ள மரபு கவிதைகள் பல்வேறு கோணங்களில் செய்யப்படும் ஆய்வு இன்னும் குறைவாகவே உள்ளன.

ஆய்வுச் சிக்கல்

இருபத்தியோராம் நூற்றாண்டில் கல்வி மாற்றங்களும் வளர்ச்சியும் பல்வகை கல்வி ஆய்வுகளுக்கு வழி வகுத்துள்ளன. இவற்றை எதிர்கொள்ள பல்வேறு திறன்களையும்

கருவிகளையும் பயன்படுத்த வேண்டும். எனவே, கல்விச் சூழலைச் சந்திக்க வாசிப்பதும் எழுதுவதும் மட்டும் போதாது. மாணவர்களின் கல்வியறிவு திறன்களுடன் புதிய நுட்பங்களையும் நவீன நுட்பங்களையும் பயன்படுத்தத் திறம்பட வேண்டும். நமது வாழ்வில் தொழில்நுட்பக் கருவிகளின் ஒருங்கிணைப்புடன், கற்றல் செயல்பாட்டில் புதிய எழுத்தறிவு திறன்களைப் பயன்படுத்த வேண்டும். Sewell and Denton (2011) மாணவர்களின் தேர்ச்சி தரத்தை அதிகரிக்கப் புதுப்பிக்கப்பட்டத் திறன்களைப் பெற்றிருக்க வேண்டும் என்று கூறினர். எனவே, மாணவர்களுக்கு நடத்தப்படும் கற்றல் பன்முகத்தன்மை கோட்பாட்டினை உள்ளடக்கியவையாக இருத்தல் வேண்டும். கல்வித்துறையில் புதிய மாற்றங்களைப் பின்பற்றுவதன் மூலம் இருபத்தியோராம் நூற்றாண்டுக் கற்றல் கற்பித்தல் மேலும் மேம்படும்.

கல்வி மற்றும் சமூகத்தின் முன்னேற்ற வடிவமைப்பிற்காகப் பன்முகத்தன்மைகள் பரிணாமித்துள்ளன Tan and Guo (2009) & Walsh (2017). மேலும், தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT) பல கலாச்சார & சமூக சூழல்களில் பல்வேறு வகையான தகவல்தொடர்புகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் பன்முகத்தன்மையின் வளர்ச்சிக்குப் பங்களித்துள்ளன. மேலும், Ladin et al. (2021) இன்றைய மாணவர்களைக் ‘காட்சித் தலைமுறையினர்’ (Visual generation) என்று குறிப்பிட்டுள்ளனர். பாடப்புத்தகங்களில் காணப்படும் பாடப்பொருள் மாணவர்களுக்குக் குறிப்பாக தற்போதைய தலைமுறையினருக்குச் சலிப்பை ஏற்படுத்தக்கூடாது. அதே கருத்துக்கு ஏற்ப, Walsh (2017) புதிய தொழில்நுட்பம், சமூக ஊடகங்கள் மற்றும் தகவல்தொடர்பு ஆகியவற்றின் மாற்றங்கள் கற்றல் கற்பித்தலில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பன்முகத்தன்மை இன்றைய மாணவர்களைச் சமாளிக்கப் புதிய தகவல்தொடர்பு வழிகளைப் பயன்படுத்த ஆசிரியர்களை வழிவகுக்கிறது. மேலும், Walsh (2017) அவர்களின் ஆய்வு பன்முகத்தன்மை உரைகளின் வழியும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் மூலமும் எழுத்தறிவு திறன்களின் மாற்றங்களை வலியுறுத்துகிறது. பேச்சு, எழுத்துக் கூறுகள் மாறினாலும், எழுத்தறிவின் நோக்கம் மாறாது, கருத்துப் பரிமாற்றம்தான் முதன்மை நோக்கமாக இருக்கும்.

Marefat and Marzban (2014) செய்தித்தாள்கள் படிப்பது முதல் தொலைக்காட்சி பார்ப்பது வரை பன்முகத்தன்மை நம் வாழ்வில் முக்கியப் பங்கு வகிக்கிறது என்று வாதிடுகின்றனர். இன்றைய சூழலில், வகுப்பறையில் பாடநூல்களில் பயன்படுத்தப்படும் படங்களின் பன்முகத்தன்மையின் வளர்ச்சி தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. பாடப்புத்தகங்கள் அறிவின் கருத்தியல் பரிமாற்றங்களாகக் கருதப்படுவதால், இவற்றை பகுப்பாய்வு செய்வது மிகவும் முக்கியம்.

ஆய்வு நோக்கமும் அணுகுமுறையும்

இந்த ஆய்வானது நான்காம் படிவத் தமிழ்மொழிப்பாடப் புத்தகத்திலுள்ள மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பன்முகத்தன்மை கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்குவதே ஆகும். நான்காம் படிவத் தமிழ்மொழிப் பாடப்புத்தகத்தில் மொத்தம் 7 மரபு கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் மூன்று கவிதைகளுக்கு மட்டுமே படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் 3 மரபு

கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்கள் மட்டுமே ஆய்வுத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டு தரவியல் (qualitative) ஆய்வு முறையில் Kress and van Leuween (2006) அவர்களின் பன்முகத்தன்மை கோட்பாடுகளில் பிரதிநிதித்துவம் (Representational), ஊடாடும் பயன்முறை (Interactive) மற்றும் தொகுப்பியல் (Composition) அடிப்படையில் பகுப்பாய்வு செய்து விளக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் தமிழ் கற்பிக்கப்படுவதால், கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் பாடப்புத்தகங்கள் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. அனைத்து வகுப்பிற்கான பாடப்புத்தகங்களிலும் மரபு கவிதை இடம்பெற்றிருப்பது சிறப்பான ஒன்றாகும். இது தமிழ்மொழி கற்றல் சூழலில் மொழிக் கற்றலை மேலும் ஊக்குவிக்கும். மொழியில் பேச்சு, எழுத்து, வாசிப்பு ஆகியவற்றிற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டாலும், காட்சிப் படங்களைக் குறைத்து மதிப்பிடப்படுவதும் புறக்கணிக்கப்படுவதும்தான் அதிகம். தமிழ்மொழிப்பாடப் புத்தகத்திலுள்ள மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள படங்களைப் பன்முகத்தன்மை கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.

ஆய்வு முடிவுகள்

பாவேந்தர் பாரதிதாசனின் பெற்றோர் ஆவல், அழகின் சிரிப்பு மற்றும் கவிஞர் கண்ணதாசனின் ஏழு ஸ்வரங்கள் ஆகிய மரபுகவிதைகளுக்கு இணைக்கப்பட்ட படங்கள் பன்முகத்தன்மை அடிப்படையில் முறையே பிரதிநிதித்துவம் (Representational), ஊடாடும் பயன்முறை (Interactive) மற்றும் தொகுப்பியல் (Composition) அடிப்படையில் பகுப்பாய்வு செய்து விளக்கப்பட்டுள்ளது. மரபுகவிதைகள் பிண்ணிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

1. Representational Mode / பிரதிநிதித்துவ முறை

Representational Mode/பிரதிநிதித்துவ முறை	Category/வகை	படம் 1	படம் 2	படம் 3
Narrative		-	-	-
Conceptual	Classificatory	-	-	-
	Analytical	-	-	-
	Symbolical	√	√	√

2. Interactive Mode/ ஊடாடும் பயன்முறை

Interactive modes / ஊடாடும் பயன் முறைகள்		Category/வகை	படம் 1	படம் 2	படம் 3
Contact/ தொடர்பு	Demand/தேவை	Gaze at the viewer/பார்வையாளரைப் பார்ப்பது	√	√	-
	Offer/சலுகை	Absence of gaze/பார்வையாளரை பர்க்காதது	√	-	√
Social distance/ சமூக இடைவெளி	Intimate/நெருக்கமான	Close shot/அருகில்	√	-	-
	Personal social/தனிப்பட்ட	Medium shot/நடுத்தர	-	√	-
	Impersonal	Long shot/நீண்ட	√		√
Perspective/ முன்னோக்கு	Involvement/ஈடுபாடு	Front angle/ முன் கோணம்	√	√	√
	Detachment/பற்றின்மை	Oblique angle/ சாய்ந்த கோணம்	-	-	-
	Viewer power/பார்வையாளர் ஆளுமை	High angle/உயர் கோணம்	-	-	-
	Equality/சமத்துவம்	Eye level/கண் மட்டம்			
	Represented participant power/பங்கேற்பாளர் ஆளுமை	Low angle/ குறைந்த கோணம்	-	-	-
Modality/ முறை	Colour/நிறம்	Full colour Saturation/முழு நிறம்	√	√	√
		Absence of colour/ நிறம் இல்லாதது	-	√	-
	Contextualization/சூழல்மயம்	Maximum/full/ அதிகபட்சம்	-	-	-
		Minimalist/ellipsis/ குறைந்தபட்சம்	√	√	√
		Blank/வெறுமை	-	-	-

3. Compositional mode/ தொகுப்பியல் முறை

Compositional modes/ தொகுப்பியல் முறைகள்	Category/வகை	படம் 1	படம் 2	படம் 3
Text-image status/உரை/பட நிலை	Informative/தகவல்	-	-	-
	Illustrative/விளக்கமான	-	-	-
	Decorative/அலங்கரிக்கப்பட்ட	√	√	√
Information value/தகவல் மதிப்பு Salience	Given/ New / (Horizontol axis) வழங்கப்பட்ட /புதிய	-	-	-
	Ideal / Real/ (Vertical axis)/ சிறந்த/ உண்மையான	-	-	-
	Centre margin	-	-	-
Framing	With frames	-	-	-
	Without frames	√	√	√

பிரதிநிதித்துவம் (Representational)

படம் 1, 2 & 3றில் மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்களின் காட்சி அமைப்பு பிரதிநிதித்துவ (Representational) கூறுகளின் அடிப்படையில், ஒரே வகையான பங்கேற்பாளர்களைக் (Participants) கொண்டுள்ளன. Conceptual அடிப்படையில் symbolical பகுப்பாய்வுக் கூறுகளை உள்ளடக்கியுள்ளன. படம் 1, ஏழு பங்கேற்பாளர்களையும் படம் 2உம் படம் 3உம் தலா ஒரு பங்கேற்பாளரையும் கொண்டுள்ளது. மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்களுள் அவற்றை எழுதிய கவிஞர்களின் படங்கள் இருப்பதால் கவிதையைப் படிக்கும் முன்னரே இது யார் எழுதிய கவிதை என்று மாணவர்களால் யூகிக்க முடியும். படம் 1இல் மேலும், சில படங்கள் குடும்ப உறுப்பினர்களைக் கொண்டிருப்பது கொடுக்கப்பட்ட மரபு கவிதை குடும்பச் சூழலோடு தொடர்புடையது என்று யூகித்து அறிய முடியும். இது கவிதையைப் பற்றி மாணவர்கள் மேலோட்டமாக மட்டுமே புரிந்து கொள்ள துணைபுரியும். ஆனால், பெற்றோர் ஆவல் என்ற மரபுகவிதைக்கான படங்கள் (narrative) அடிப்படையில் திசையன்களைப் (vector connections) பயன்படுத்தி கவிதையின் பொருளடக்கத்தை விளக்கும் வண்ணமாகக் கொடுக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் கவிதையை மேலும் நன்கு புரிந்து கொள்வர். இது மாணவர்களின் சுயக் கற்றலுக்குப் பெரிதும் துணைபுரியும். அவர்கள் வாசிக்கும் மரபு கவிதையைப் பொருத்தமான பொருள் உணர்த்தும் படங்களோடு கற்கும் போது அது அவர்களின் மனத்திலும் நிலையாய் நிற்கும்.

ஊடாடும் பயன்முறை (Interactive)

ஊடாடும் பயன்முறையின் அடிப்படையில் படங்களுக்கிடையேயான சமூக இடைவெளி அகநிலை மற்றும் புறநிலைக் கூறுகளை உட்படுத்தியுள்ளது. இரண்டு வகையான படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. குடும்ப உறுப்பினர்களின் படம் அகநிலையில் மையக் கண்ணோட்டத்தில் பிரதிநிதித்துவ பங்கேற்பாளர்கள் பார்வையாளர்களைப் பார்க்கும்படி உள்ளது. கவிஞரின் படம் புறநிலையில் வேறு திசையை நோக்குவது போலவும் பார்வையாளர்களுக்குத் தொடர்பு இல்லாத வண்ணமும் அமைந்துள்ளது. மற்ற இரண்டு மரபுகவிதைகளுக்கான படங்கள் கவிஞர்களின் படங்களாகும். இரண்டு படங்களுமே புறநிலையில் பார்வையாளர்களைப் பார்க்காதது போல் உள்ளன. மேலும் படம் 1-இல் சமூக இடைவெளி கூறுகளைப் பார்த்தோமேயானால், குடும்ப உறுப்பினர்களின் படம் நீண்ட இடைவெளியில் முழு உருவமும் தெரிவது போலவும் கவிஞரின் படம் அருகாமையான இடைவெளியில் தலை முதல் தோள்பட்டை வரை தெரிவது போலவும் அமைந்துள்ளது. நீண்ட இடைவெளியில் எடுக்கப்படும் படங்கள் அந்நியர்களாக பிரதிநிதித்துவம் செய்யப்படும் நபர்களுக்கானது. மேலும், நீண்ட இடைவெளிப் படங்கள் இரண்டு பங்கேற்பாளர்களிடையே பற்றின்மை இருப்பதைக் குறிக்கிறது Silva (2016). படம் 2 நடுத்தர இடைவெளியில் கவிஞரின் தலை முதல் இடுப்புப் பகுதி வரை தெரியும் வகையில் உள்ளது. படம் 3 நீண்ட இடைவெளியில் கவிஞரின் முழு உருவமும் தெரிவது போல் உள்ளது. முழுமையான படங்களைப் பார்ப்பதன் மூலம் மாணவர்கள் மேலும் தெளிவான புரிதலைப் பெறுவர். முன்னோக்குப் பகுப்பாய்வு அடிப்படையில் 3 படங்களுமே முன் கோணத்தில் அமைந்துள்ளது. இதில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட பங்கேற்பாளர்கள் கண் மட்டத்தில் படங்களை உற்று நோக்க இயலும். இதன் விளைவாக, பிரதிநிதித்துவ பங்கேற்பாளர்களுக்கும் பார்வையாளருக்கும் இடையே எந்த ஆளுமை வேறுபாடும் இல்லை என்பதைக் காண முடிகிறது. தொடர்ந்து மரபுகவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்களின் வண்ணத்தைப் பார்த்தோமேயானால் படம் 1-உம் படம் 3-உம் முழு வணணப்படமாகும். படம் 2-ல் பின்னிருக்கும் சூழல் காட்சி வண்ணத்திலும் கவிஞரின் படம் வண்ணமில்லாமல் கருப்பு / வெள்ளையில் அமைந்துள்ளது. மேலும், சூழல்மய அடிப்படையில் படங்களை ஆய்வு செய்யும் போது, 3 படங்களுமே குறைந்தபட்ச சூழல்மயத்தில் அமைந்துள்ளது. படங்கள் முழுப்பக்கத்தையும் நிரப்பாமல் ஒரு பகுதியாகவே கொடுக்கப்பட்டுள்ளது. மரபுகவிதையைக் கட்டமைப்புக்குள் வைத்து படங்கள் துணையாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பன்முகத்தன்மையில் மூன்றாவது கூறு தொகுப்பியல் ஆகும். Kress and van Leeuwen (2006) கோட்பாட்டின்படி, காட்சிப் பகுப்பாய்வின் மூன்றாவது பரிமாணம் என்பது பிரதிநிதித்துவ மற்றும் ஊடாடும் கூறுகளுக்கு இடையேயான தொடர்புடன் தொடர்புடைய தொகுப்பியல் கூறாகும். Kress and van Leeuwen (2006) கட்டமைப்பில் உள்ள தொகுத்தல் பொருள் Halliday கட்டமைப்பில் உள்ள உரை (Tekstual) அர்த்தத்துடன் ஒத்துப்போகிறது. தகவல் மதிப்பு, சாயல் மற்றும் கட்டமைப்பு ஆகியவை தொகுப்பியலின் மூன்று கூறுகளாகும். படம் 1, 2 மற்றும் 3-இல் கொடுக்கப்பட்டுள்ள காட்சிப் படங்கள் பக்கத்தின் வலதுபுறத்தில் வைக்கப்பட்டுள்ளன. வலதுபுறத்தில் அமைந்திருக்கும் காட்சிப்படங்கள் பார்வையாளருக்கு ஏற்கனவே தெரிந்த ஒன்றாகவும், கொடுக்கப்பட்ட மரபுக்கவிதைக்குப் பழக்கமான மற்றும்

ஒப்புக்கொள்ளப்பட்டத் தகவலாகவும் இருப்பதாகப் பொருள்படும். ஆகவே, மூன்று படங்களும் வலதுபுறத்தில் கொடுக்கப்பட்டு மரபுக்கவிதையின் உள்ளடக்கத்திற்கு ஏற்ற பொதுவான உணர்வும் சுயத்தெளிவும் உணரப்படும் வகையில் அமைந்துள்ளது.

தொகுப்பு அர்த்தத்தின் மூன்றாவது மற்றும் கடைசிக் கூறு கட்டமைத்தல் ஆகும். கட்டமைப்புக் கோடுகளுடன் வண்ண இடைநிறுத்தங்கள் மற்றும் உறுப்புகளின் இடையில் உள்ள வெள்ளை இடைவெளி ஆகியவை காட்சிகளில் கட்டமைப்பின் பயன்பாட்டைக் குறிக்கின்றன. "கட்டமைப்பு இல்லாதது குழு அடையாளத்தை வலியுறுத்துகிறது" Kress and van Leeuwen (2006). "ஒரு உருவத்தின் கட்டமைப்பானது உறுப்புகளுக்கு இடையே உள்ள தொடர்ச்சியின்மை அல்லது தொடர்ச்சியைக் குறிக்கிறது" Jewitt (2002). படம் 1, 2 மற்றும் 3-றின் காட்சிப்படம் கட்டமைப்பு இன்றி கொடுக்கப்பட்டுள்ளது. இது குழு அடையாளத்தை வலியுறுத்துகிறது. இதன்வழி மரபுகவிதையின் பொருளுக்கும் காட்சிப்படத்திற்கும் தொடர்ச்சி இருப்பதை உணர முடிகிறது.

மரபுகவிதைகளுக்கு இணைக்கப்பட்ட படங்கள் பெரும்பாலும் ஒரே மாதிரியான கூறுகளில் அமைந்துள்ளன என்பதை ஆய்வின் முடிவின் மூலம் அறிய முடிகிறது. பலதரப்பட்ட கூறுகளிலான படங்களுடன் கற்றல் பகுதிகள் அமையுமானால் அது மாணவர்களுக்குப் புதிய அனுபவத்தைக் கொடுப்பதோடு அவர்களின் கற்றல் திறனையும் மேம்படுத்தும். ஆசிரியர்களின் கற்பித்தலிலும் ஒரே பாணியில் இல்லாமல் மாறுபட்டிருக்கும். பாட உள்ளடக்கத்திற்கு இணைக்கப்படும் படங்கள் உள்ளடக்கத்தைப் பொருளுணர்த்தும் வகையில் இருந்தால் அது மாணவர்களின் புரிதலை எளிதாக்கும் Shabiralyani et al. (2015).

நிறைவுரை

இன்றைய உலகில், எழுத்து மூலங்களைக் காட்டிலும் படங்களின் மூலமே தகவல்கள் அதிகம் பரப்பப்படுகின்றன (Goldstein, 2016). Alvarez (2016) பன்முகத்தன்மை அணுகுமுறை மொழியியலின் காட்சி முறைகளின் கலவையின் மூலம் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது என்று கூறுகிறார். எனவே, மொழி கற்றலுக்கு மொழியியல் முறையுடன் பல்வேறு முறைகளின் கூறுகள் தேவைப்படுகின்றன. பன்முகத்தன்மை கூறுகளின் அடிப்படையில் மரபுகவிதைகள் போதிக்கப்படுவது, மாணவர்கள் மரபுகவிதைகளைக் கற்றுக்கொள்வதையும் எளிதாகப் புரிந்துகொள்வதையும் எளிதாக்கும். மேலும், இது ஆசிரியர்களுக்கு மாணவர்களை மிகவும் பயனுள்ள வழியில் வழிகாட்ட உதவும்.

இந்தக் கூற்றுக்கு ஏற்ப, வகுப்பறையில் உள்ள பலதரப்பட்ட கூறுகளைக் கொண்ட கற்பித்தல் பொருட்கள் மாணவர்களின் மன வளர்ச்சிக்குத் துணைபுரியும் என்பதை மறுக்க முடியாது. பாடப்புத்தகங்கள், குறிப்பாக தமிழ் மொழிப் பாடநூல்களை வெளியிடுவதில் காட்சிப் படத்தை உருவாக்கும் செயல்முறைக்கு இந்த ஆய்வு நேரடி முக்கியத்துவம் வகிக்கிறது. மேலும், பன்முகத்தன்மை கூறுகளின் அடிப்படையில் உயர்தரமான காட்சிப் படங்களை உருவாக்கவும், ஆசிரியரின் நோக்கத்தைப் பூர்த்தி செய்யவும் மாணவர்களின் புரிதலை எளிதாக்கவும் இது உதவும் என்று நம்பப்படுகிறது. இன்றைய நிலையில்

தயாரிக்கப்படும் பாடப்புத்தகங்கள் பாடத்தின் உள்ளடக்க அம்சங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றன. உள்ளடக்க உரையின் விளக்கம் முதல் காட்சிப் படங்கள் வரை பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதற்கு முன் பன்முகத்தன்மையின் கூறுகள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் தமிழ்மொழிப் பாடப்புத்தகங்களில் உள்ள மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்படும் படங்கள் மட்டுமின்றி வேறு வகையான பாடப் பனுவல்களுக்கும் கொடுக்கப்படும் படங்களின் காட்சித் தயாரிப்பின் தரத்தை மேம்படுத்த உதவும்.

இந்த ஆய்வு புத்தக வெளியீட்டாளர்கள் பயனுள்ள பாடப்புத்தகங்களைத் தயாரிப்பதில் ஒரு வழிகாட்டலாக இருக்கும். தற்போதைய, பாடப்புத்தகங்களின் வெளியீட்டில் பன்முகத்தன்மைக் கூறுகளைப் பயன்படுத்தி படங்களும் உரையின் காட்சித் தயாரிப்புத் தொடர்பான குறிப்பிட்ட வழிகாட்டுதல்களும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. தற்போதுள்ள வழிகாட்டுதல்கள் பொதுவானவை மற்றும் பொருள் உள்ளடக்கத்தை மட்டுமே தயாரிப்பது பற்றியவை. மேலும், பன்முகத்தன்மை கூறுகள் நிறைந்த பாடத்திட்டத்தை உருவாக்கவும் இந்த ஆய்வு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். தமிழ்மொழிப் பாடப்புத்தகங்களில் காணப்படும் மரபு கவிதைகளுக்குக் கொடுக்கப்பட்ட படங்களில் பன்முகத்தன்மைக் கூறுகளின் பயன்பாட்டைக் கவனத்தில் கொள்வதன் மூலம், பன்முகத்தன்மை கூறுகளை மிகவும் துல்லியமாகவும் திறமையாகவும் பயன்படுத்துவதற்கான விளக்கத்தை இந்த ஆய்வு தெளிவாக வழங்குகிறது.

துணைநூற்பட்டியல்

Ajayi, L. (2009). English as a second language learners‟ exploration of multimodal texts in a junior high school. Journal of Adolescent & Adult Literacy, 52(7), 585-595.

Alvarez, J. (2016). Meaning making and communication in the multimodal age: ideas for language teachers. Colombian Applied Linguistics Journal, 18(1), 98-115.

Benavot, A., & Jere, C. (2016). Gender bias is rife in textbooks. Retrieved from: https://gemreportunesco.wordpress.com.

Goldstein, B. (2016). Online video genres and student creation. Retrieved from https://www.youtube.com/watch?v=SbgZjlOxGKI

G. Kress and T. van Leeuwen, Reading images: The grammar of visual design, New York: Routledge, 2006.

Jewitt, C. 2002. The move from page to screen: The multimodal reshaping of school English. Journal of Visual Communication, 1(2), 171-196.

Kasmaienezhadfard, S., Pourrajab, M., & Rabbani, M (2015). Effects of pictures in textbooks on students‟ creativity. Multi Diciplinary Edu Global (Quarterly), 4(2), 83-96.

Kress, G. and van Leeuwen, T. 2006. Reading Images: The Grammar of Visual Design. (2nd Edition) London: Routledge.

Ladin, C. A., Omar, I. M., Balakrishnan, V., Kamaruddin, A. Y., & Mamat, S. (2021). Konsep Dan Aplikasi Kemahiran Melakar Aras Tinggi (KMAT) Dalam Pengkaryaan Seni Visual Pelajar Sekolah Menengah: Concepts and Applications of High-Level Sketch Skills (HLLS) in Visual Artwork for Secondary School Students. Sains Insani, 6(2).

Marefat, F., & Marzban, S. (2014). Multimodal Analysis of Gender Representation in ELT Textbooks: Reader's Perceptions. Procedia-Social and Behavioral Sciences, 98, 1093-1099.

Mohd Nazri Abdul Rahman, Norlidah Alias, Saedah Siraj & Zaharah Hussin. 2013. Inovasi Dan Kreativiti Dalam Rekabentuk Buku Teks Sekolah Menengah: Aplikasi Pendidikan Interpretive Structural Modelling (ISM), dlm JuKu: Jurnal Kurikulum Dan Pengajaran Asia Pasifik, Bil. 1, Isu 1; 1-9.

Serafini, F. (2012a). Expanding the four resources model: Reading visual and multi-modal texts. Pedagogies: An International Journal, 7(2), 150-164.

Serafini, F. (2012b). Reading multimodal texts in the 21st century. Research in the Schools, 19(1), 26-32

Sewell, W. C., & Denton, S. (2011). Multimodal literacies in the secondary English classroom. English Journal, 100(5), 61-65.

Shabiralyani, G., Hasan, K. S., Hamad, N., & Iqbal, N. (2015). Impact of visual aids in enhancing the learning process case research: District Dera Ghazi Khan. Journal of Education and Practice, 6(19), 226-234.

Silva, M. D. (2016). Accounting for multimodality in an EFL textbook: analysing activities and suggesting ways to approach multimodal texts. Diálogo das Letras, 5(2), 92-109.

Tan, L., Guo, L., & Chia, A.L. (2009). Teaching English in new times. In P. Teo, T.M. Yin, & C. Ho (Eds.), Exploring new frontiers: Challenging students in the language and literature classroom (pp. 15–29). Singapore: Pearson Longman.

Walsh, M. (2017). Multiliteracies, Multimodality, New Literacies and…. What Do These Mean for Literacy Education? In Marion Milton (Ed.), Inclusive Principles and Practices in Literacy Education, (pp. 19-33). UK: Emerald Publishing Limited.